


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






## டேன்டீ நிறுவனத்தை மத்திய அரசு ஏற்று நடத்த தயார்

# சவால்!

## தமிழக முதல்வர் வேண்டாம் என்று எழுதிக்கொடுக்க வேண்டும் பா.ஜ.க., மாநில தலைவர் அண்ணாமலை அதிரடி அறிவிப்பு

நீலகிரி, நவ.21-

"தமிழக முதல்வர், டேன்டீ எங்களுக்கு வேண்டாம். இந்த 5,315 ஏக்கரை மத்திய அரசே எடுத்துக் கொள்ளுங்கள். மத்திய அரசே இந்நிறுவனத்தை நடத்துங்கள் என்று எழுதித்தந்தால், டேன்டீயை மத்திய அரசு எடுத்து நடத்துவதற்கு தயார்," என்று பா.ஜ.க., மாநிலத்தலைவர் அண்ணாமலை அதிரடியாக தெரிவித்தார்.



நீலகிரி மாவட்டம் கூடலூரில், டேன்டீ தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழிலாளர்களின் குடும்பங்களைக் காப்பதற்காக தமிழக பா.ஜ.க., சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் மாநில தலைவர் அண்ணாமலை பேசியதாவது:

தமிழகத்தில் இருக்கின்ற சிவகங்கை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தஞ்சாவூர், மதுரை, திருச்சி, கரூர், நாமக்கல் உள்ளிட்ட 10 மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை கிழக்கிந்தியகம்பெனிக்காக பிரிட்டிஷாரால் இலங்கை தலைமன்னாரில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக 1823-ம் ஆண்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கையில் குடியுரிமை பறிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட போது, இந்தியா திரும்பிய தமிழர்களுக்கு தமிழகத்தில் குடியுரிமை வழங்கி அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டது தான் டேன்டீ நிறுவனம். இந்நிறுவனத்தை மூடப்போவதாக தமிழக அரசு ஒரு சிக்னல் கொடுத்துள்ளது.

கிட்டத்தட்ட டேன்டீக்கு கீழ் வரக்கூடிய 5,315 ஏக்கரில் தேயிலை விளைச்சல் குறைவாக இருக்கிறது. இந்நிலங்களின் தன்மை மாறியிருக்கிறது. எனவே, அந்தஇடத்தைவனத்துறை வசம் ஒப்படைக்க அரசாணை பிறப்பித்து வனத்துறையிடம் ஒப்படைத்துள்ளனர்.

தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் 700 பேர் வேலை இழந்துவிட்டார்கள். குடியிருப்புகளில் 15 நாட்களில் வீட்டை காலி செய்யும்படி நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது. இலங்கை தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றி அவதிப்படும் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு 10 ஆயிரம் வீடுகளை பிரதமர் நரேந்திர மோடி கட்டித்தந்தார்.

இப்போதும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குச் சொல்வது, டேன்டீ வேண்டாம் என்று சொல்லுங்கள். நாங்கள் அதை எடுத்துக் கொள்கிறோம். அது எங்களுடைய பொறுப்பு. எழுத்துப்பூர்வமாக தமிழக முதல்வர் டேன்டீ எங்களுக்கு வேண்டாம். இந்த 5,315 ஏக்கரை மத்திய அரசே எடுத்துக் கொள்ளுங்கள், மத்திய அரசே இந்நிறுவனத்தை நடத்துங்கள் என்று எழுதி தந்தால், டேன்டீயை மத்திய அரசு எடுத்து நடத்துவதற்கு நாங்கள் தயார். இவ்வாறு அண்ணாமலை அதிரடியாக பேசினார்.



► தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் அறக்கட்டளை மற்றும் கீதாபவன் அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்த 54 மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட மணமக்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து அவர்களை வாழ்த்தினார். நிகழ்ச்சியில் அமைச்சர் கீதா ஜீவன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, சட்டமன்ற உறுப்பினர் எழிலன், சென்னை மாநகராட்சி நிலை குழு தலைவர் சிற்றரசு, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் அறக்கட்டளை தலைவர் சிம்மசந்திரன், செயலாளர் பொன்னுச்சாமி, பொருளாளர் கருப்பையா, அறக்கட்டளையின் தலைவர் பிரகாஷ் மோடி, நிர்வாக அறங்காவலர் மனு கோயல், பொருளாளர் முராரிலால் சந்தோலியா, அறங்காவலர் சிவக்குமார் கோயங்கா, அறக்கட்டளையின் நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.






# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

முயலும் போது முட்களும் உன்னை முத்தமிடும். எல்லோரும் பயணிக்கிறார்கள் என்று நீயும் பின் தொடராதே.. உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு..!



தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,925 | Rs.5,327 |

## தமிழகத்தில் இன்று, நாளை மழைக்கு வாய்ப்பு சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

சென்னை, நவ.21-

தமிழகத்தில் அடுத்த 4 நாட்களுக்கு பரவலாக மழைக்கும், இன்று 21ம் தேதி மற்றும் நாளை 22ம் தேதி ஒரு சில மாவட்டங்களில் கனமழைக்கும் வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி நேற்று (நவ.20) காலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றது. இதனால், தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் காரைக்காலில் இருந்து சுமார் 630 கிலோமீட்டர் தொலைவில் கிழக்கு - தென்கிழக்கேயும்,



சென்னையில் இருந்து சுமார் 670 கிலோமீட்டர் தொலைவில் கிழக்கு - தென்கிழக்கேயும் மையம் கொண்டது.

இது மேற்கு- வடமேற்கு திசையில் நகர்ந்து தமிழக - புதுவை மற்றும் தெற்கு ஆந்திரா கடலோரப்பகுதிகளை நோக்கி அடுத்த 48 மணி நேரத்தில் நகரக்கூடும். இதன் காரணமாக தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இன்று 21ம் தேதி, வடதமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், சென்னை, திருவள்ளூர் ராணிப்பேட்டை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை 22ம் தேதி, வடதமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை மற்றும் வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

இவ்வாறு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## உசிலம்பட்டியில் உலக கழிப்பறை தின பேரணி

மதுரை, நவ.21-

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி சீமானூத்து ஊராட்ச்சி ஒன்றியத்தில் முழுசுகாதாரத்தை நோக்கி உலக கழிப்பறை தினம், மக்களின் பயணம் நடைபெற்றது.

இதில், எனது ஊராட்சியை திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற ஊராட்சியாக மாற்றுவோம். ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை கழித்து, துணிப்பையை உபயோகப்படுத்துவேன். மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம் பிரித்து தூய்மை காவலரிடம்



வழங்குவேன், என உறுதி மொழி எடுத்து கோஷமிட்டு நடை பயணம் செய்தனர்.

பயணத்தில் ஏராளமான கிராம பொது மக்கள், தூய்மை பணியாளர்கள், பஞ்சாயத்து செயல் அலுவலர் முருகேசன், ஜோதிராமன், சீமானூத்து பஞ்சாயத்து ஆசிரியர்கள் அருள்தாஸ், அமிர்தசிரோண்ணி, சத்தியலட்சுமி, பட்டம்மாள் மற்றும் மாணவ, மாணவியர்கள், ஊர் பொது மக்கள் சுகாதாரப் பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






மதுரை ஆனையூரில் உள்ள கிழக்கு மண்டலத் தலைவர் வாசுகி சசிக்குமார் வார்டு-3-ல் ரூ.75 லட்சம் மதிப்புள்ள 2,790 சதுர அடியில் மாநகராட்சி புதிய ஆஸ்பத்திரி கட்டப்பட்டு வருகிறது. கட்டிட காண்ட்ரக்டர் சஞ்சய் காந்தி கட்டி வருகிறார். உதவி வருவாய் அலுவலர் ராஜாராம், உதவி பொறியாளர் சோலைமலை, உதவி செயற்பொறியாளர் ஆரோக்கிய சேவியர், ரெங்கராஜன், காளி முத்தன் ஆகியோர் மேற்பார்வையில் வேலை நடந்து வருகிறது.

## கந்தர்வகோட்டையை சேர்ந்த 5 நீர்ப்பாசன தலைவர்களுக்கு மாஜி அமைச்சர் விஜயபாஸ்கர் சால்வை அணிவித்து வாழ்த்து

இலுப்பூர், நவ.21-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தொகுதிக்குட்பட்ட குன்றண்டார்கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., நிர்வாகிகள் நீர்ப்பாசனத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

குன்றாண்டார்கோவில் ஒன்றியத்தில் மொத்தமாக 8 இடங்களில் நீர் பாசன தலைவர் தேர்தல் நடைபெற்றது. மொத்தமுள்ள எட்டு இடங்களில் ஐந்து இடங்களை அ.தி.மு.க.,வைச் சேர்ந்தவர்களே வெற்றி பெற்றுள்ளனர். அதன்படி மின்னாத்தூர் பெரியகுளம் நீர் பாசன சங்கத் தலைவராக யாக்கோப், அண்டக்குளம் பெரியகுளம் நீர் பாசனத் தலைவராக நாகு, செனையக்குடியை பெரியகுளம் நீர் பாசனத்



தலைவராக மார்க்கண்டேயன், மங்கதேவன்பட்டி பெரியகுளம் நீர் பாசன சங்க தலைவராக கோபால், பள்ளத்துப்பட்டி பிரகதாம்பாள்புரம் பெரியகுளம் நீர் பாசன சங்கத் தலைவராக சின்னத்தம்பி தங்களை எதிர்த்து போட்டியிட்ட தி.மு.க., வேட்பாளரை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளனர்.

வெற்றி பெற்ற அனைவரும் இலுப்பூரில் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரை சந்தித்து சாலை அணிவித்து வாழ்த்து பெற்றனர். மேலும் வெற்றி பெற்ற நீர்பாசன சங்க தலைவர்களை முன்னாள் அமைச்சர் விஜயயாஸ்கர் சால்வை அணிவித்து இனிப்புகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் பாலு, ராமநாதன் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஆலங்குடி தாலுகாவில் நீர் பயன்படுத்துவோர் சங்க தேர்தல்: தி.மு.க.,–அ.தி.மு.க., வாக்குவாதம்

ஆலங்குடி, நவ.21-

ஆலங்குடி தாலுகாவிற்குட்பட்ட பகுதிகளில் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் மொத்தம் 34 உள்ளது. இந்த 34 சங்கங்களுக்கும், தலா ஒரு தலைவர் என 34 தலைவர் மற்றும் 91 உறுப்பினர் பதவிகள் உள்ளன. இந்த சங்கங்களுக்கான தேர்தல் கடந்த 7ம் தேதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆர்.டி.ஓ., முருகேசன் தலைமையில், தாசில்தார் செந்தில்நாயகி முன்னிலையில் வேட்பு மனுக்கள் பெறப்பட்டன.

இதில், போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதுபோக, மீதமுள்ள மாஞ்சான்விடுதி, மேலாத்தூர், கல்லாலங்குடி, மாங்காடு, கொத்தமங்கலம், வல்லத்திராக்கோட்டை, விஜயரெகுநாதபுரம், குளவாய்பட்டி, நம்புகுழி ஆகிய இடங்களுக்கான தேர்தல் நடந்தது. இதில், 8 தலைவர்கள், 9 உறுப்பினர்கள் இடங்களுக்கு தேர்தல் நடந்தது.

இந்நிலையில், ஆலங்குடி அருகே உள்ள கல்லாலங்குடி



அரசு தொடக்கப்பள்ளியில், கல்லாலங்குடி பெரியகுளம் நீரினைப் பயன்படுத்துவோர் சங்க தேர்தல் தொடங்கியது. அப்போது, தி.மு.க.,வினர், வாக்காளர்களுக்கு இடத்திற்கான பட்டா சிட்டா ஆவணம் இல்லாமல் வாக்களிக்க அனுமதிக்கக் கூடாது எனவும், அ.தி. மு.க.,வினர் ஆதார், வாக்காளர் அடையாள அட்டை இருந்தால் வாக்களிக்கலாம் என்று அதிகாரிகளிடம் தெரிவித்த நிலையில், தற்போது பட்டா, சிட்டா கேட்பது தேர்தலை சீர்குலைக்கும் வகையில் உள்ளதாககூறிஇருதரப்பினரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனைத்தொடர்ந்து, போலீஸ் இன்ஸ்பெக்டர் அழகம்மை தலைமையில் 20க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர். பின்னர், அங்கு வந்த தேர்தல் நடத்தும் அலுவலர் ஆர்.டி.ஓ., முருகேசன், தாசில்தார் செந்தில்நாயகி ஆகியோர் வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இதனைத்தொடர்ந்து, நேற்றுமுன்தினம் காலை 9.10 மணிக்கு தேர்தல் தொடங்கி மதியம் 2 மணி வரை நடந்தது. பதிவான வாக்குப்பெட்டிகள் பாதுகாப்புடன் ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் வைத்து எண்ணப்பட்டது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## பணகுடியில் இலவச கண்சிகிச்சை முகாம்



திருநெல்வேலி, நவ.21-

திருநெல்வேலி மாவட்டம் பணகுடியில் விவேகானந்தா கேந்திரம், சங்கர் ஸ்டீல் ஸ்டோர்ஸ், அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து இலவச கண் சிகிச்சை முகாம் பணகுடி ஆஸ்லே நடுநிலைப் பள்ளியில் வியாபாரிகள் சங்க கௌரவத் தலைவர் சங்கரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், வடக்கு வள்ளியூர் ம.தி.மு.க., ஒன்றிய செயலாளர் சங்கர குமார், சாதிக் மற்றும் அரவிந்த் கண் மருத்துவர்கள், செவிலியர்கள், மக்கள் கலந்து கொண்டு கண் குறைபாடுகளை நீக்கி இலவசமாக கண் அறுவை சிகிச்சைக்கு நோயாளிகளை அழைத்துச் சென்றனர்.



ஈரோடு அந்தியூர் தி.மு.க., எம்.எல்.ஏ., வெங்கடாசலம், மலைக் கிராமங்களுக்குச் செல்லும் அரசுப் பேருந்தில் பயணித்து, மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். அப்போது சாலைகள் மோசமாக உள்ளதாக சிலர் கூறியதை அடுத்து, வனத்துறை அனுமதி பெற்று விரைவில் சாலைகள் சீரமைக்கப்படும் என உறுதியளித்தார்.

## கிணற்றுக்குள் மோட்டரை பழுதுபார்க்க இறங்கிய இருவர் கயிறு அறுந்து விழுந்த விபத்தில் காயம்

இலுப்பூர், நவ.21-

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் அருகே உள்ள கல்லுப்பட்டியில் கிணற்றின் உரிமையாளர் செந்தில்குமார் என்பவரது மோட்டர் பழுதாகி இருப்பதாகக் கூறி பழுது செய்யும் இருவரை அழைத்துள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த அழகு முருகன் மற்றும் மகேந்திரன் ஆகிய இருவரும் 85 அடி கிணற்றுக்குள் கயிறு ஏணி மூலம் உள்ளே இறங்கியுள்ளனர். 30 அடி இறங்கும் முன்பே கயிறு அறுந்துவிழுந்ததில் இருவரும் கிணற்றுக்குள் விழுந்தனர். இச்சம்பவம் குறித்து பதறிப்போன உரிமையாளர் செந்தில் குமார், இலுப்பூர் தீயணைப்பு நிலையத்திற்கு



தகவல் தெரிவித்தார்.

தகவலின்பேரில், சம்பவ இடம் விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் கயிறு மூலம் இருவரையும் பத்திரமாக மீட்டனர். அழகு முருகன் என்பவருக்கு காலில் முறிவு ஏற்பட்டதை அடுத்து புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மகேந்திரன் என்பவருக்கு சிறிய காயங்களுடன் இருவரும் உயிர் தப்பினர். மகேந்திரனுக்கு இலுப்பூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

துரிதமாக செயல்பட்டு இருவரையும் பத்திரமாக மீட்ட தீயணைப்புத் துறையினருக்கு மக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

## திருவொற்றியூரில் வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிப்பார்க்கும் பணி

திருவொற்றியூர், நவ.21-

சென்னை திருவொற்றியூரில் வீடு, வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிப்பார்க்கும் பணியை மண்டல குழு தலைவர் தனியரசு தொடங்கி வைத்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் சென்னை வட கிழக்கு தி.மு.க., மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் அறிவுறுத்தலின் படி சென்னை வட கிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 7 வட்டம் மற்றும் 10 வட்டத்திற்குட்பட்ட சன்னதி தெரு, சடை குப்பம்பாட்டை, நேதாஜி நகர், அண்ணாமலை



நகர், பாலகிருஷ்ணன் நகர் உள்ளிட்ட பகுதிகளில் பாக முகவர்களுடன் வீடு, வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்க்கும் பணியை திருவொற்றியூர் மண்டல குழு தலைவர் தி.மு.க., தனியரசு துவக்கி வைத்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி கணேசன், பகுதி அவைத்தலைவர் ஆசைதம்பி, பகுதி துணை செயலாளர்கள் சம்பத், குமார், பொருளாளர் குமரேசன், வட்ட செயலாளர் தமிழ்செல்வன், கார்த்திகேயன், டில்லிராஜ், தயாளன், கண்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## திருமயம் நீர் பாதுகாப்போர் சங்க நிர்வாகிகள் தேர்தல்

திருமயம், நவ.21-

திருமயம் அரிமளம் பகுதிகளில் உள்ள நீரினை பாதுகாப்போர் சங்கத்தில் காலியாக உள்ள தலைவர் மற்றும் ஆட்சி மண்டல தொகுதிகளின் உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தல் நடைபெற்றது.

திருமயம் மற்றும் அரிமளம் உள்ளிட்ட பகுதிகளில் நீரினை பாதுகாப்போர் சங்க தேர்தலில் போட்டியிடுவதற்கு 50க்கும் மேற்பட்டோர் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் பல இடங்களில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் திருமயத்தில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருமயம் வட்டத்திற்குட்பட்ட



கண்மாய்களின் ஆயக்கட்டு தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் மருங்கி வயல், வேப்ப வயல், வெட்டிவயல், விநாயகர் வயல் ஆகிய ஆயக்கட்டு தேர்தலில் அரசம்பட்டி சண்முகத்தை எதிர்த்து திருமயம் சந்தைப்பேட்டை ஜான் பீட்டர் போட்டியிட்டார்.

போட்டியில் சண்முகம் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஜான் பீட்டர் தோல்வியை தழுவினார். இதில் உறுப்பினர் போட்டியில் மதகு எண் 1 சிவராமன் போட்டியின்றி தேர்வு பெற்றார்.

அதன் தொடர்ச்சியாக திருமயம் தாமர வயல் ஆயக்கட்டு தேர்தல் நடைபெற்றது. இதில், திருமயம் அகில் கரையை சேர்ந்த பிரபாகரனை எதிர்த்து பாப்பா வயல் முத்துக்குமார் போட்டியிட்டார். இதில் பிரபாகர் 109 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். வெற்றி பெற்றவர்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வெற்றி பெற்றதற்கான சான்றிதழ் வழங்கினர்.

## கடையநல்லூரில் இலவச கண்சிகிச்சை மருத்துவ முகாம்

தென்காசி, நவ.21-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் ஐ நியூஸ் அறக்கட்டளைதலைவர் ஷேக் தலைமையில் இலவச கண்சிகிச்சை மருத்துவ முகாம் நடைபெற்றது.

கொரோனா காலத்தில் மக்களுக்கு சேவைகளையும், பொருள் உதவியும் கொடுத்து மக்கள் தொண்டாற்றிய சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தென்காசி மாவட்ட தி.மு.க., பொருளாளர் வடகரை செரிப், சேயான் இப்ராஹிம், சாகுல்



ஹமீது, மருத்துவர் பிரின்ஸ் சுமன், கமாலுதீன், சுந்தர், அமுதக்கண்ணன், மஞ்சி பீர், முகமது மீரான் அல் அமீன், அப்பாஸ், சேகனா, தியாகராஜன், சாகுல் ஹமீது, இப்ராஹிம், ஆசாத், யாத்ரா பழனி, ராஜா சிவன் மாரி, கணேசன், தளவாய் சுந்தரம், பாசித், இசக்கி துரை, சிங்கிலி பட்டிமணிகண்டன், புளியங்குடிநாகூர் கனி, உலக ஸ்கூல் பள்ளி நிர்வாகி, தலைமையாசிரியர் சண்முகசுந்தரம், மற்றும் சமூக ஆர்வலர்கள், அரசு அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், மருத்துவர்கள், மக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## நாமக்கலில் கலைத்திருவிழா



நாமக்கல், நவ.21-

தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத்துறை சார்பாக நடத்தப்பட்ட மாநில அளவிலான கலைத்திருவிழா 2022-23ம் ஆண்டுக்கான போட்டிகள் நாமக்கலில் நடைபெற்றது.

இப்போட்டியில் மயிலாடுதுறை மாவட்டம், மயிலை சப்தஸ்வரங்கள் மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர். இதில், ஜெயஸ்ரீ என்ற மாணவி வாய்ப்பாட்டு போட்டியில் மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ளார். மாணவி ஜெயஸ்ரீக்கு கலைத்திருவிழா ஏற்பாட்டாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

# காரைக்காலில் புதிய வாக்காளர் சேர்க்கும் பணிகள்: மாவட்ட துணை ஆட்சியர் ஆய்வு



காரைக்கால், நவ.21-

புதுச்சேரி, காரைக்கால் மாவட்டத்தில் 01.01.2023 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் புதிய வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதற்கும் மற்றும் பெயர் நீக்கல் பெயர் சேர்த்தல் போன்ற பணிகள் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நேற்று இரண்டாம் நாளாக நடைபெற்றது.

மேலும், புகைப்பட அடையாள அட்டை பெறுதல் மற்றும் புகைப்பட அடையாள அட்டையை ஆதார் எண்ணுடன் இணைத்தல் போன்ற பணிகளும் நடைபெற்றது. இப்பணியினை காரைக்கால் மாவட்ட துணை ஆட்சியரும், வாக்காளர் பதிவு அதிகாரியுமான ஆதர்ஷ், பல்வேறு வாக்குச்சாவடிகளில் நடைபெரும் பணியினை ஆய்வு மேற்கொண்டார். வரும் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் வாக்காளர் சரிபார்க்கும் பணி நடைபெறுகிறது. இதை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தமிழகம், புதுச்சேரி துறைமுகங்களில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்



சென்னை, நவ.21-

தமிழகம் மற்றும் புதுச்சேரி துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலத்தை தொடர்ந்து புயல் எச்சரிக்கை முன்னிட்டு, சென்னை, கடலூர், நாகை, எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

மேலும், இன்றும், நாளையும் பாண்டிச்சேரி, காரைக்கால், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, சீர்காழி, சிதம்பரம், கடலூர், சென்னை உட்பட கடலூர் மாவட்டங்களில் கன மழை பெய்யக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆரணி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு காவல் நிலையத்தில் விழிப்புணர்வு பயிற்சி வழங்கல்



ஊத்துக்கோட்டை,நவ21-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் 60 மாணவிகளுக்கு ஆரணி காவல் நிலையத்தில் விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டது.

இதில், காவல் நிலையத்தில் எவ்வாறு புகார் அளிப்பது?, பதிவேடுகளை எவ்வாறு பராமரிப்பது?. குற்றவாளிகளை கைதுசெய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன? ஆவணங்களை எவ்வாறு பராமரிக்க வேண்டும்?. முதல் தகவல் அறிக்கையை எவ்வாறு பதிவு செய்ய வேண்டும்?. குற்றவாளிகளை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்படுத்த மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்னென்ன? எவ்வாறு குற்றவாளியை சிறையில் அடைப்பது?. காவல் நிலையத்தில் கைதியின் அறை, சப்-இன்ஸ்பெக்டர் அறை, வரவேற்பாளர் அறை, கணினி அறை, காவலர்களின் ஒய்வு அறை, ஆவணங்கள் வைப்பறை, துப்பாக்கிகள் பாதுகாத்து வைக்கும் அறை உள்ளிட்டவைகளை பார்வையிட்டனர்.

மேலும், "காவலர்கள் உங்களது நண்பன்" என்பதை மக்களுக்கு விளக்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், போதை பொருட்கள் ஒழிப்புக்கு மாணவர்களின் ஒத்துழைப்பும், கடமைகளும் என்ன? என்பது உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சப்-இன்ஸ்பெக்டர்கள் ராஜ்குமார், பிரதாபன், தியாகராஜன், தலைமை காவலர்கள் செல்லமுத்து, குமரவேல், சரஸ்வதி மற்றும் பள்ளி ஆசிரியை சுஜாதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# செந்துறை பகுதியில் 6 புதிய நியாய விலைக் கடைகள் போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் திறந்து வைப்பு



அரியலூர், நவ.21-

அரியலூர் மாவட்டம் செந்துறை பகுதியில், ஆறு புதிய நியாய விலை கடைகளை, தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் சிவசங்கர் திறந்து வைத்தார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில், கூட்டுறவுத்துறை சார்பில், செந்துறை உட்பட ஆறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள, முழு நேர மற்றும் பகுதிநேர நியாய விலை கடைகள் திறப்பு விழாவுக்கு, அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி தலைமை வகித்தார். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தீபா சங்கரி வரவேற்று பேசினார்.

செந்துறை, உஞ்சினி, சிறுகடம்பூர் ஆகிய ஊர்களில் அமைக்கப்பட்ட, நான்கு புதிய முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் சிறுகளத்தூர் ஆதிதிராவிடர் காலனி, சித்துடையார் ஆகிய ஊர்களில் அமைக்கப்பட்டுள்ள பகுதி நேர நியாயவிலைக் கடைகள் உட்பட ஆறு நியாய விலை கடைகளை, போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) அறப்பளி, மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சுருளி பிரபு, உஞ்சினி ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன், கூட்டுறவு சார்பதிவாளர்கள் பழனிசாமி, சசிக்குமார், விவேக், செந்துறை வட்டாட்சியர் பாக்கியம் விக்டோரியா, தி.மு.க., பிரமுகர்கள், கூட்டுறவு சங்க செயலாளர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# ஆட்டோவில் வெடிகுண்டு வெடித்தது தீவிரவாத செயல்: கர்நாடக டி.ஜி.பி.,



மங்களூரு, நவ.21-

"கர்நாடக மாநிலம் மங்களூருவில் ஆட்டோ ஒன்றில் நடந்த வெடிவிபத்து தற்செயலானது அல்ல; அது தீவிரவாதச் செயல்," என்று கர்நாடக டி.ஜி.பி., பிரவீன் சூட் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் தட்சிண கன்னடா மாவட்டம் மங்களூரு நகர் நாகுரி பகுதியில் நேற்று மாலை ஆட்டோ சென்று கொண்டிருந்தது. திடீரென்று அந்த ஆட்டோ 'டமார்' என்று பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதில் ஆட்டோவில் மளமளவென தீப்பிடித்தது. இதை பார்த்த அக்கம்பக்கத்தினர் விரைந்து வந்து ஆட்டோவில் எரிந்த தீயை அணைத்தனர். இதில், ஆட்டோ டிரைவரும், ஒரு பயணியும் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் 2 பேரையும் மீட்டு மங்களூரு வென்லாக் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுபற்றி தகவலறிந்ததும் மூத்த போலீஸ் அதிகாரிகளும், தடயவியல் நிபுணர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர். ஆட்டோ வெடித்தது எப்படி? என்பது பற்றி ஆய்வு செய்தனர். அப்போது ஆட்டோவில் இருந்து குக்கர் கண்டெடுக்கப்பட்டது. குக்கரில் வெடிபொருள் வைக்கப்பட்டிருந்த அடையாளங்கள் இருந்தன. குக்கரை வெடிகுண்டாக செய்து வெடிக்க செய்திருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது. தடயவியல் நிபுணர்கள் சோதனை நடத்தியதில் வெடிகுண்டு தயாரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய வயர்கள், பேட்டரிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆட்டோவில் பயணித்த பயணி தன் அடையாளங்களை மறைத்துள்ளார். தன் பெயர் பிரேம் ராஜ் என்று கூறினாலும் அடையாள அட்டையில் வேறு பெயராக உள்ளது. அவர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். அவரது பின்னணி என்ன? என்பது தெரியவில்லை. அவர் அருகிலுள்ள மங்களூரு ரெயில் நிலையத்துக்கு செல்வதற்காக ஆட்டோவில் சவாரி செய்துள்ளார். அப்போதுதான் குண்டு வெடிப்பு சம்பவம் நடந்துள்ளது. குக்கரில் வெடிகுண்டு வைத்து அவர் ரெயில் நிலையத்துக்குச் செல்ல என்ன காரணம்? அவரது உண்மையான பெயர் என்ன? எந்த ஊரை சேர்ந்தவர்? ரெயில் நிலையத்தில் குண்டுவெடிப்பு நடத்தி நாசவேலையில் ஈடுபட திட்டமிட்டாரா? என பல கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தின் அருகே கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் கட்டிடத்தின் அருகிலுள்ள கண்காணிப்பு கேமராவில் ஆட்டோவில் குக்கர் குண்டு வெடித்துச் சிதறிய காட்சிகள் பதிவாகியுள்ளது.

இது குறித்து கர்நாடகா டி.ஜி.பி., பிரவீன் சூட் தனது ட்விட்டர் பக்கத்தில், "உறுதியாகிவிட்டது. நடந்தது விபத்து அல்ல. அது தீவிரவாத செயல். பலத்த சேதம் விளைவிக்கும் நோக்கத்துடன் நடத்தப்பட்டுள்ளது. கர்நாடக போலீஸார் மத்திய அமைப்புகளுடன் இணைந்து விசாரித்து வருகின்றனர். இந்த தாக்குதலில் காயமடைந்தவர் பேசும் சூழலில் இல்லை. இதுவரை நடந்த விசாரணையில் இது தீவிரவாத தாக்குதல் என்பது உறுதியாகியுள்ளது. உறுதியான தகவல்கள் இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் கிடைக்கும்," என்றார்.

தமிழகத்தில் சமீபத்தில் கோவையில் நடந்த கார்வெடிகுண்டு வெடித்த சம்பவம் குறித்து என்.ஐ.ஏ., பல்வேறு இடங்களில் விசாரித்து வருகிறது. இந்நிலையில் தமிழகத்தின் அண்டை மாநிலமான கர்நாடகா மங்களூருவில் ஆட்டோவில் குக்கர் வெடிகுண்டு வெடித்து இருவர் படுகாயம் அடைந்த சம்பவம் பொதுமக்களுக்குகு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# வேலூர் மாவட்டம் அடுக்கம்பாறையில் உலக கழிவறை தின விழிப்புணர்வு பேரணி



வேலூர், நவ.21-

வேலூர் மாவட்டம், கணியம்பாடி வட்டம், அடுக்கம்பாறையில் உலக கழிவறை தினத்தை முன்னிட்டு சுத்தமாக இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு பேரணியில் மாவட்ட ஆட்சியர் குமாரவேல் பாண்டியன் தலைமையில் உறுதிமொழி ஏற்று பேரணி நடைபெற்றது.

ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரப்பன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு, ஒன்றிய குழு தலைவர் திவ்யா, செவிலியர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு தாலுகா காவல் நிலையத்தில் பள்ளி குழந்தைகளுக்கு விழிப்புணர்வு



ஈரோடு, நவ.21-

தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் சைலேந்திரபாபு தேசிய குழந்தைகள் பாதுகாப்பு நாள் சம்மந்தமாக பள்ளி குழந்தைகளுக்கு குழந்தை பாதுகாப்பு குறித்தும், குழந்தைகளை காவல் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் கோப்புகள் குறித்தும், காவல்துறை பணிகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்த உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அதனடிப்படையில் ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சசிமோகன் ஐ.பி.எஸ்., அறிவுறுத்தலின்படி ஈரோடு தாலுக்கா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் சோமசுந்தரம், தாலுகா காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட திண்டல் ஸ்ரீ ஜெய்தன்யா டெக்னோ பள்ளி மாணவிகளுக்கு குழந்தைகளுக்கான வன்கொடுமை மற்றும் பாலியல் சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் போது, காவல் உதவி ஆய்வாளர்கள், பள்ளி ஆசிரியர்கள், பள்ளி மாணவிகள் கலந்து கொண்டனர்.

# 10% இட ஒதுக்கீடுக்கு எதிராக மறு சீராய்வு மனுத்தாக்கல்: வி.சி.க., திருமாவளவன் அதிரடி!



வேலூர், நவ.21-

"வி.சி.க.,சார்பில் 10சதவீத இட ஒதுக்கீடுக்கு எதிராக மறு சீராய்வு மனுத்தாக்கல் செய்யப்படும், " என்று அக்கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

வேலூர் அண்ணா சாலையில் உள்ள தனியார் ஹோட்டலில் விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் திருமாவளவன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

வேலூர் கஸ்பா கன்சால்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் ரெயில்வே நிர்வாகத்திற்குச் சொந்தமான இடங்களில் வசிப்பவர்களை காலி செய்ய ரெயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அவர்களின் வாழ்வாதாரத்தை கருதி இந்த நடவடிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். சி.எம்.சி., நிர்வாகம் தற்போதுள்ள மருத்துவமனையில் இருந்து ராணிப்பேட்டையில் புதிதாக தொடங்கப் பட்டுள்ள மருத்துவமனைக்கு இருதய அறுவை சிகிச்சை பிரிவை மாற்றும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் இங்குள்ள ஏழை, எளியவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, புதிய மருத்துவமனையில் புதிதாக இருதய அறுவை சிகிச்சை பிரிவை தொடங்க வேண்டும்.

10 சதவீத இட ஒதுக்கீடு என்பது அரசியல் அமைப்பு சட்டத்தை நீர்த்துப்போக செய்கிற செயல். உயர் வகுப்பில் பின்தங்கிய சமூகமாக இருக்கிற ஏழைகளுக்கு இலவச கல்வி, கல்வி கடனுதவி, தொழில் தொடங்க கடன் உதவி உள்ளிட்டவைகளை அரசு உதவி செய்ய வேண்டுமே தவிர, இட ஒதுக்கீடு அளிக்கக்கூடாது. 10 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மறு சீராய்வு மனுத்தாக்கல் செய்யப்படும். இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

# காரைக்காலில் பென்காக் சிலாட் மாநில சேம்பியன்ஷிப் போட்டி




காரைக்கால், நவ.21-

புதுச்சேரி மாநில காரைக்கால் விளையாட்டு திடலில் உள்ள உள் விளையாட்டுத் திடலில் மத்திய, மாநில அரசுகளால் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டான பென்காக் சிலாட் மாநில அளவிலான சேம்பியன்ஷிப் -2022 போட்டி நடைபெற்றது.

இந்த விளையாட்டில் கலந்து கொள்ள புதுச்சேரி, காரைக்கால், மாகி மற்றும் யானத்திலிருந்து வந்த போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். இதில், சப் ஜூனியர், ஜூனியர், மற்றும் சீனியர் அளவிலான விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

இந்த விளையாட்டு போட்டியின் சிறப்பு விருந்தினராக செய்தி மற்றும் விளம்பரத்துறை உதவி இயக்குனர் குலசேகரன், காரைக்கால் மற்றும் பி.பி.சி.எல்., இயக்கனர் மீனாட்சி சுந்தரம், கலந்து கொண்டு மாநில அளவிலான போட்டியினை குத்துவிளக்கு ஏற்றி வைத்து தொடங்கி வைத்தனர். மேலும் குணபாலன், ரோட்டரி கிளப் பிரென்ச் சிட்டி, விமல் ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்கள்.

விழா ஏற்பாடுகளை பென்காக் சிலாட் சங்கத்தின் தலைவர் சாந்தி லட்சுமி, செயலர் பச்சையப்பன், காரைக்கால் மாவட்ட செயலர் தேவி தயாள் பிள்ளை ஆகியோர் செய்திருந்தனர்.

# சிறுபான்மையினர் பாதுகாப்பு கடைபிடிக்கப்பட வேண்டும்: எம்.எல்.ஏ., நாஜிம் வலியுறுத்தல்



காரைக்கால், நவ.21-

புதுவை அரசு காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக முன்னாள் பிரதமர் அன்னை இந்திராகாந்தியின் பிறந்த தினத்தை முன்னிட்டு தேசிய ஒருமைப்பாட்டு தினமாக ஒரு வாரம் கடைபிடிக்கப்பட்டு பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வின் இரண்டாம் நாளாக சமூக நலத்துறை சார்பில், சிறுபான்மையோர் தினவிழா புனித சூசையப்பர் முதியோர் இல்ல வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் சமூக நலத்துறை நல அதிகாரி ராஜேந்திரன் வரவேற்றார்.

இதில் தெற்கு தொகுதி எம்.எல்.ஏ., நாஜிம் தலைமை வகித்தார். மேலும், மாவட்ட துணை ஆட்சியர் ஆதர்ஷ் முன்னிலை வகித்தார். சிறுபான்மையினர் நலம் காத்திடல் என்றும் அவசியமே என்ற தலைப்பில் பேச்சாளர்கள் ஸ்ரீகாந்த் பக்ஷிராஜன் மற்றும் முகமது இர்ஷாத், சூசைராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சிறுபான்மையினர் நலன் குறித்து சிறப்புரை ஆற்றினர்.

நிறைவில் எம்.எல்.ஏ., நாஜிம் பேசியதாவது: முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் தியாகத்தை நினைவு கூர்ந்தார். மேலும் சமூக நலத்துறை மூலம் சிறுபான்மையினருக்கான நலன்கள் அனைத்தும் சென்று சேர வேண்டும். இந்த ஒருமைப்பாடு விழாவின் மூலம் மத நல்லிணக்கம் பேணி பாதுகாக்கப்பட வேண்டும். சிறுபான்மையினர் பாதுகாப்பு கடைபிடிக்கப்பட வேண்டும். மத்திய அரசின் திட்டங்கள் அனைத்தும் சிறுபான்மையினருக்கு சென்றடைய துறை அதிகாரிகள் மற்றும் மேல் அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் ஒதுக்கப்படும் சிறுபான்மையினருக்கான தொகையை அவர்கள் நலனுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# உக்ரைன் போரால் உணவு, எரிசக்தி நெருக்கடி ! ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் எச்சரிக்கை



புதுடெல்லி, நவ.21-

"உக்ரைன் போர் காரணமாக கடினமான உணவு மற்றும் எரிசக்தி நெருக்கடி ஏற்பட்டுள்ளது" என்று இந்திய ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரிசர்வ் வங்கியின் பொருளாதாரம் மற்றும் கொள்கை ஆய்வுத்துறையின் வருடாந்திர ஆய்வு மாநாடு ஐதராபாத்தில் நடந்தது. இதை ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் தொடங்கி வைத்து பேசியதாவது:

கொரோனா பெருந்தொற்று பெரிய தரவுகளின் சக்தியை ஆராய்ந்து பயன்படுத்தவும் மற்றும் வீட்டிலிருந்து பணிபுரியும்போது நேரடி கருத்து வழிமுறைகளை வலுப்படுத்தவும் வாய்ப்பை உருவாக்கியது. கொரோனா முதல் அலை காலத்தில் தரவுகளை திரட்டுவதும், தரவுகளில் தொடர்புடைய புள்ளிவிவர இடைவெளியும் முதலாவது மிகப்பெரிய சவாலாக இருந்தது.

மிகவும் ஆபத்தான இரண்டாவது அலையின்போது, இலக்கு கொள்கை தலையீடுகளை வடிவமைப்பதற்கு துறை அளவிலான அழுத்தம் பற்றிய தகவல்களை சேகரிப்பது இன்னும் முக்கியமானதாக இருந்தது. கொரோனா 3வது அலை இருந்தபோதும் ஏற்கனவே சரிவடைந்த பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பும் நேரத்தில் ஏற்பட்ட உக்ரைன் போர் புதிய சவால்களை கொண்டு வந்தது. ஒரு கடினமான உணவு மற்றும் எரிசக்தி நெருக்கடியை உலகம் திடீரென எதிர்கொண்டது.

வேகமாக மாறிவரும் புவிசார் அரசியல் சூழல்களால் உந்தப்பட்டு உலகப் பொருளாதாரத்தின் துண்டாடுதல் வடிவில் ஒரு புதிய ஆபத்து உருவானது. இது முக்கியமான பொருட்களுக்கான எந்த ஒரு மூலத்தையும் சார்ந்திருப்பதைக் குறைக்க வேண்டியதன் அவசியத்தை முன்னுக்குக் கொண்டு வந்தது. பொருட்களின் விலை வானளவு உயர்ந்ததுடன், வினியோக சங்கிலியிலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இந்த காரணிகள் பணவீக்கத்தின் உலகமயமாக்கலுக்கு வழிவகுத்தன.

வர்த்தகக் கொள்கை நடவடிக்கைகள் (கட்டணம் மற்றும் வரி அல்லாத) மற்றும் நிதி நடவடிக்கைகள் (விலை முடக்கம், வரிக்குறைப்பு மற்றும் ஏழைகளுக்கு மானியங்கள்) ஆகியவற்றை உலக நாடுகள் நாடியதால், இந்தியச் சூழலில் இத்தகைய நடவடிக்கைகளின் பொருத்தத்திற்கும் கவனம் செலுத்தப்பட்ட ஆராய்ச்சி கவனம் தேவை. கொரோனா, ஐரோப்பாவில் போர் மற்றும் நாடுகளின் பணவியல் கொள்கையின் தீவிரமான இறுக்கம் ஆகிய 3 மிகப்பெரிய அதிர்ச்சிகள் 2020ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து பொருளாதார ஆராய்ச்சிக்கு மிகவும் மாறுபட்ட சவால்களை முன்வைத்தன.

இந்த மூன்று அதிர்ச்சிகளின் பின்விளைவுகள் இன்னும் வெளிவருகின்றன. இதனால் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். எனவே, ரிசர்வ் வங்கியின் ஆராய்ச்சி செயல்பாடு கடந்த காலத்தில் இருந்தது போல இந்த சாத்தியக்கூறுகளை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு சக்திகாந்த தாஸ் பேசினார்.



புதுக்கோட்டை மாவட்டம் மீமிசல் சங்கீத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ,மாணவியர் காவல் துறையின் அழைப்பினை ஏற்று காவல் நிலையம் செயல்படும் விதம் அங்கு என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டு சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது. ஆபத்து காலங்களில் பயம் இல்லாமல் நாம் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் எவை, தற்காப்புக்காக போலீசார் பயன்படுத்தும் உபகரணங்கள், அவற்றை கையாளும் திறன் ஆகியன குறித்து காவல் நிலையத்திலேயே விழிப்புணர்வு பெற்றுக் கொண்டனர். காவல்துறை சார்பில் கேட்கப்பட்ட கேள்வி பதில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பதிலளித்தவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற அனைவருக்கும் பள்ளியின் தாளாளர் ராமசாமி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

## கறம்பக்குடி பகுதியில் கார்த்திகை தீபம் அகல் விளக்கு தயாரிக்கும் பணி தீவிரம்





கறம்பக்குடி, நவ. 21-

கார்த்திகை தீபத்திருநாள் டிசம்பர் 6ம் தேதி கொண்டாடப்பட உள்ளது. இதற்காக கறம்பக்குடி பகுதியில் அகல் விளக்குகள் தயாரிக்கும் பணி தீவிரமடைந்துள்ளது.

கார்த்திகைதீபத்திருநாளை முன்னிட்டு கோவில்கள், வீடுகள், கடைகளில் தீபம் ஏற்றி வழிபாடு நடத்தி கொண்டாடுவது வழக்கம். இதற்காக புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையூர், ராங்கியன்விடுதி, வாராப்பூர், துவரடிமனை, கொசலக்குடி, பொன்னமராவதி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் விளக்குகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இதற்காக, அப்பகுதிகளில் உள்ள குளத்தில் இருந்து களிமண் எடுக்கப்பட்டு, சக்கரம் மூலம் விளக்குகள் தயார் செய்து அதை காயவைத்து பின்பு விறகுகள் மூலம் சூளையில் வைத்து அகல் விளக்குகள் தயாரிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கும் அகல் விளக்குகள் புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமின்றி திருச்சி, தஞ்சாவூர், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

இதுகுறித்து, மழையூரில் அகல் விளக்கு தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள சக்திவேல் கூறியதாவது:

இங்குள்ள குளத்தில் இருந்து களிமண் இலவசமாக கிடைத்தாலும் அதை எடுத்து வருவதற்கான வாகன செலவு அதிகளவில் ஏற்படுகிறது. நாள் ஒன்றுக்கு 700 முதல் ஆயிரம் விளக்குகள் தயாரிக்க முடியும். ஆயிரம் விளக்குகள் ரூ.900-க்கு விற்பனை செய்கிறோம். உள்ளூர் மற்றும் வெளியூர்களுக்கும் சென்று விற்பனை செய்து வருகிறோம். முன்பு ஓராண்டு முழுவதும் வேலை இருந்தது. ஆனால், தற்போது 6 மாதங்கள் மட்டுமே வேலை உள்ளது.

இத்தொழிலில் ஈடுபடுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும். மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மண்பாண்டங்களை பாதுகாப்பாக கொண்டுசெல்ல மானியத்துடன் வாகன கடன் வழங்க வேண்டும். மழையூரில் மண்பாண்ட தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட தொழிற்கூட பணிகள் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. அரசு விரைவில் நடவடிக்கை எடுத்து தொழிற்கூடம் பயன்பாட்டுக்கு கொண்டு வர நவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## மாஜி ஜனாதிபதி அப்துல் கலாம் 93-வது பிறந்த நாள் அறந்தாங்கி அருகே மாட்டு வண்டி எல்கை பந்தயம்



அறந்தாங்கி, நவ.21-

அறந்தாங்கி அருகே கட்டுமாவடியில் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் 93வது பிறந்தநாளை முன்னிட்டு மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது.

பெரியமாடு, சின்னமாடு என இரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் சென்னை, கோவை, திருப்பூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட 87 மாட்டு வண்டிகள் போட்டியில் கலந்து கொண்டன.

பெரியமாட்டிற்கு இலக்கை அடைந்து திரும்பி வர 8 மைல் தொலைவும், சின்னமாட்டிற்கு 6 மைல் தொலைவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. போட்டியில் கலந்து கொண்ட மாட்டு வண்டிகள் நிர்ணயிக்கப்பட்ட பந்தைய இலக்கினை நோக்கி ஒன்றன்பின் ஒன்றாக முந்திச் சென்றன. போட்டியில் வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர் மற்றும் சாரதிகளுக்கு ரூ.1 லட்சத்து 60 ஆயிரம் ரொக்கப்பரிசம், கோப்பைகளும் வழங்கப்பட்டன.

பந்தயத்தைக் காண சாலையின் இருபுறமும் நின்று 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கண்டு ரசித்தனர். மணமேல்குடி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.









புதுக்கோட்டை மகாராணி ரோட்டரி சங்கத்தின் மூத்த உறுப்பினர் ராஜேஸ்வரி ராஜேந்திரன் பிறந்தநாளை முன்னிட்டு ஹோட்டல் சங்கீதாஸில் நடைபெற்ற ரோட்டரி சங்கக் கூட்டத்தில் சங்கத் தலைவி லெட்சுமி அண்ணாமலை தலைமையில் ராஜா குழுமங்களின் தலைவர் ராஜேந்திரன் தம்பதியருக்கு பொன்னாடை அணிவித்து நிர்வாகிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

## ஜார்க்கண்டில் நிலக்கரி திருடிய 4 பேரை சுட்டுக்கொன்ற பாதுகாப்புப் படையினர்

ராஞ்சி, நவ.21-

ஜார்க்கண்ட் மாநிலம் தான்பத் மாவட்டத்தில் நிலக்கரி திருடும் கும்பலை தடுத்தபோது ஏற்பட்ட துப்பாக்கி சண்டையில் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாக்மரா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட டெனிதிஹ் நிலக்கரி சேமிப்பு பகுதியில் மத்திய தொழிலக பாதுகாப்புப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒரு கும்பல் நிலக்கரியை திருடுவதை பார்த்தனர். அங்கு விரைந்த பாதுகாப்பு படையினர், நிலக்கரி திருட்டை தடுத்தனர். அப்போது நிலக்கரி திருடர்கள் திடீரென தாக்கத் தொடங்கினர்.

இதையடுத்து பாதுகாப்புப் படையினரும் பதிலடி கொடுத்தனர். இரு தரப்பினருக்கும் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் 4 திருடர்கள் சுட்டுகொல்லப் பட்டனர். 2பேர் காயமடைந்தனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சனிக்கிழமை நள்ளிரவு 12.30 மணிக்கு இச்சம்பவம் நடந்துள்ளது.

ஆயுதங்களுடன் நிலக்கரி திருடர்கள் தாக்குதல் நடத்திய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



தென்காசி மாவட்டத்திற்கு முதல்வர் வருகை முன்னிட்டு அவர் உரையாற்றுகிற கணக்கப்பிள்ளை வலசை வேல்ஸ் வித்யாலயா பள்ளி மைதானத்தை வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பார்வையிட்டார். இந்நிகழ்வில், தென்காசி மாவட்ட ஆட்சியர் ஆகாஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கிருஷ்ணராஜ், தெற்கு மாவட்ட தி.மு.க., செயலாளர் சிவ.பத்மநாபன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா ஆகியோர் உடனிருந்தனர்.

## அறந்தாங்கி அருகே வேன் மோதி விவசாயி பலி



அறந்தாங்கி, நவ.21

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே வெட்டிவயல் கிராமத்தைச் சேர்ந்தவர் விவசாயி ரவி. இவர் கூகனூரில் உள்ள தனது வயலினை பார்வையிடுவதற்காக சைக்கிளில் நாகுடி அருகே சென்ற போது சுப்பிரமணியபுரத்திலிருந்து நாகுடி நோக்கி அதிவேகமாக வந்த வேன் மோதி தூக்கி வீசப்பட்டு படுகாயம் அடைந்தார்.

உடனடியாக அருகில் இருந்தவர்கள் மீட்டு அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி ரவி பரிதாபமாக உயிரிழந்தார். வேன் ஒட்டுநர் தப்பி ஓடிய நிலையில் விபத்து குறித்து நாகுடி போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் நூற்றாண்டு விழாவில் பல்வேறு விளையாட்டு போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் விராலிமலை பிளாக் சுகாதார ஆய்வாளர்கள் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றதையொட்டி இரண்டாம் பரிசினை மாவட்ட கலெக்டர் பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயங்களை வழங்கினார். உடன் புதுக்கோட்டை எம்எல்ஏ முத்துராஜா, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கே கே செல்லபாண்டியன், இணை இயக்குனர் ஊரக நலப் பணிகள் ராமு, அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் பூவதி, நகர மன்ற தலைவர் திலகவதி செந்தில், துணை இயக்குனர்கள் ராம் கணேஷ், கலைவாணி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## போட்டித்தேர்வு, வேலைவாய்ப்பு கருத்தரங்கம் கிள்ளனூர் மாணவர் அமைப்பினர் ஏற்பாடு



குன்றாண்டார்கோவில், நவ.21-

கிள்ளனூர் மாணவர் அமைப்பு சார்பில், போட்டித்தேர்வு மற்றும் வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா கிள்ளனூர் கிராமத்தில் கிள்ளனூர் மாணவர் அமைப்பு ஏழாம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு எதிர்வரும் 27ம் தேதி அன்று நடைபெற உள்ள போட்டித் தேர்வில் தேர்வு பெறவும் மாதிரி காவலர் தேர்வு நேற்று நூலகக் கட்டிடத்தில் நடைபெற்றது.

இதில், கிள்ளனூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். பங்கேற்ற அனைவருக்கும் மாதிரி தொகுப்பு வினாத்தாள் இலவசமாக வழங்கப்பட்டது. மேற்படி தேர்வு குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில், புதுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர் முருகேசன், குளத்தூர் வட்டாட்சியர் சக்திவேல், அறந்தாங்கி வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், தனி வட்டாட்சியர் (நி.எ) திருநாவுக்கரசு, தனி வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) சூரியபிரபு, ஒன்றிய கவுன்சிலர் முத்துலட்சுமி சின்னப்பா, ஊராட்சி மன்ற தலைவர், சாந்தி செல்வம், நீர்ப்பாசன சங்கத்தலைவர் மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாணவி பிரியாவுக்கு நடத்தப்பட்ட அறுவை சிகிச்சை தவறு இல்லை: அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்



சென்னை, நவ.21-

கால்பந்தாட்ட வீராங்கனை பிரியா மரணத்தில், அறுவை சிகிச்சை செய்ததில் எந்த தவறும் இல்லை. இனிவரும் காலங்களில் அறுவை சிகிச்சையின்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து மருத்துவர்களுடன் கலந்தாலோசிக்க உள்ளதாகவும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட பாரதி நகர் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அப்பாவு நகர் மற்றும் சுப்புபிள்ளை தோட்டம் பகுதி மக்களுக்கு மறு குடியமர்வு செய்ய தற்காலிக ஒதுக்கீடு ஆணைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று வழங்கினார்.

பின்னர் அமைச்சர், செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவரிடம் மாணவி பிரியா மரணத்திற்கு அறுவை சிகிச்சையில் நிகழ்ந்த தவறுதான் காரணமா? என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "அறுவை சிகிச்சையில் தவறு இல்லை. அறுவை சிகிச்சைக்குப் பிறகு காம்ப்ரிஷன் பேண்டு என்று சொல்லப்படக்கூடிய கட்டுப் போடப்பட்டுள்ளது.

இந்தக் கட்டு இரத்தப் போக்கை நிறுத்துவதற்கானது. மாணவியின் மூட்டு ஜவ்வினை அறுவை சிகிச்சை செய்தபோது, இரத்த ஓட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு இந்த பேண்டு போடப்பட்டுள்ளது. அதை உடனடியாக ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் அகற்றியிருக்க வேண்டும். கவனக்குறைவு, அலட்சியம் காரணமாக அது அகற்றப்படவில்லை. மருத்துவர்கள் மீது அதற்கான நடவடிக்கைதான் எடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் இருப்பதைப் போல, ஒவ்வொரு அறுவை சிகிச்சையின் தணிக்கை, ஒவ்வொரு அறுவை சிகிச்சையின் போதும் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் அங்கு செய்யப்பட வேண்டிய விஷயங்கள் குறித்து வரும் 23ம் தேதி அரசு மருத்துவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட உள்ளது. இக்கூட்டத்தின் இறுதியில், அறுவை சிகிச்சையின்போது பின்பற்றிய வேண்டிய வழிமுறைகளாக வெளியிட இருக்கிறோம். இவ்வாறு மா.சுப்பிரமணியன் விளக்கம் அளித்தார்.

## கொடுக்க வேண்டிய ரூ.30,000 பாக்கியை கொடுங்க.. எம்.எல்.ஏ.,வை வழிமறித்துக் கேட்ட டீக்கடைக்காரர்!



போபால், நவ.21-

மத்தியபிரதேச முன்னாள் வருவாய்த்துறை அமைச்சரான கரண் சிங் வர்மா, தற்போது இச்சாவர் தொகுதியில் (முன்பு சீஹோர்) பா.ஜ.க., சார்பில் போட்டியிட்டு எம்.எல்.ஏ.,வாக உள்ளார். இந்நிலையில் இவர் அண்மையில் சீஹோர் மாவட்டம் இச்சாவர் தொகுதிக்கு காரில் வந்தபோது அப்பகுதியைச் சேர்ந்த டீக்கடை உரிமையாளர் ஒருவர் காரை வழிமறித்தார். காரை டிரைவர் நிறுத்தியபோது, எம்.எல்.ஏ.,விடம் சென்ற டீக்கடை உரிமையாளர் 2018-ம்ஆண்டு முதல் டீக்கடையில் சாப்பிட்டுவிட்டு தராமல் சென்ற ரூ.30 ஆயிரம் பாக்கி பணத்தைத் திரும்பத் தருமாறு கேட்டுள்ளார்.

சுமார் 4 ஆண்டுகளுக்கும் மேலாக பணத்தைத் திருப்பித் தரமால் உள்ளதாகவும், அதை உடனடியாக தந்து உதவுமாறு அந்த டீக்கடை உரிமையாளர் தெரிவித்துள்ளார். தொகுதி மக்கள் எதிரே, இப்படி கடனைக் கேட்டதால் பா.ஜ.க., எம்.எல்.ஏ., கரண் சிங் வர்மா தர்மசங்கடத்துக்கு உள்ளானார்.

இதையடுத்து, விரைவில் அந்தக் கடனைத் திருப்பித் தருவதாக டீக்கடை உரிமையாளரிடம் கரண் சிங் வர்மா உறுதி அளித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். இதுதொடர்பான வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

இந்த சீஹோர் மாவட்டம், மத்தியபிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகானின் சொந்த மாவட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.






## புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்துக்கு மாநாடு, பிரச்சாரம், போராட்டம் என்.ஆர்.காங்., ஆதரவு சுயேட்சை எம்.எல்.ஏ.,க்கள் அறிவிப்பு



புதுச்சேரி, நவ.21-

மத்திய அரசு, புதுச்சேரியை ஆய்வுசெய்யும் எலியாக பயன்படுத்துகிறது. மாநில அந்தஸ்துக்காக மாநாடு, பிரச்சார இயக்கம், போராட்டம் நடத்தப்படும் என்று முதல்வர் ரங்கசாமி ஆதரவு சுயேட்சை எம்.எல்.ஏ.,க்கள் அறிவித்துள்ளனர்.

புதுவை மாநில அந்தஸ்து பெற சமூக அமைப்புகள் ஆலோசனைக் கூட்டத்தை சுயேட்சை எம்.எல்.ஏ., நேரு நேற்று கூட்டினார். இதில், பிரகாஷ்குமார் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். இருவரும் முதல்வர் ரங்கசாமி ஆதரவு சுயேட்சைகள். இக்கூட்டத்தில் பல்வேறு சமூக அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் புதுவைக்கு தனி மாநில அந்தஸ்து பெறுவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தின் முடிவில் சுயேட்சை எம்.எல்.ஏ.,க்கள் நேரு, பிரகாஷ்குமார் மற்றும் அமைப்பினர் தெரிவித்ததாவது:

மத்தியில் ஆட்சி செய்யும் அரசுகள் புதுவையை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்வது இல்லை. மத்திய அரசு புதிதாக கொண்டு வரும் திட்டங்களை யூனியன் பிரதேசமான புதுச்சேரியை ஆய்வு செய்யும் எலியாக பயன்படுத்துகின்றனர். அந்த திட்டம் மக்களுக்கு பயனளிக்குமா? என ஆராயக்கூட நேரம் கொடுப்பது இல்லை. அரசு கொண்டுவரும் திட்டங்களை அதிகாரிகள் செயல்படுத்துவது இல்லை.

யூனியன் பிரதேசமாக புதுவையை வைத்திருப்பதால் நமது மாநிலம் தொடர்ந்து பின்னடைவை சந்தித்து வருகிறது. எனவே, புதுவை தனி மாநில அந்தஸ்து பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இது தொடர்பாக சட்டப்பேரவையில் 11 முறை தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மக்களால் தேர்வான முதல்வர் அதிகாரத்தை பறிக்கும் விதமாகவே அதிகாரிகள் செயல்படுகிறார்கள். அரசால் அறிவிக்கப்படும் அனைத்து திட்டங்களையும் செயல்படுத்த ஆளுநரும், தலைமைச் செயலரும், ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளும் தடையாக இருக்கிறார்கள்.

இந்தியாவில் 10 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட மிசோரம், சிக்கிம் மாநிலங்களுக்கு மாநில தகுதி இருக்கும்போது 14 லட்சம் மக்கள் தொகை கொண்ட புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து தராதது வியப்பளிக்கிறது. இதற்கு ஒரே தீர்வு புதுவைக்கு தனி மாநில அந்தஸ்து தான். தனி மாநில அந்தஸ்து பெற இந்த கூட்டத்தில் முதல் கட்டமாக மாநாடு நடத்துவது, அடுத்த படியை மக்களை சந்தித்து பிரச்சார இயக்கம் நடத்துவது, தொடர்ந்து மாபெரும் போராட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# கூடலூர் டேன்டீ நிறுவனம் அரசுக்கு அண்ணாமலை சவால்!

# ஆட்டோவில் வெடிகுண்டு வெடிப்பு கர்நாடக போலீஸ் டி.ஜி.பி., பகீர்!





# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து எம்.எல்.ஏ.,க்கள் திடீர் போர்க்கொடி!


| சென்னை / புதுக்கோட்டை | 21.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஹெலன் , ஆங்கிலோ-பர்மிய இந்தியத் திரைப்பட நடிகை (பி.1938)



ஆனந்திபென் படேல் , குசராத் மாநில முன்னாள் முதலமைச்சர் (பி.1941)



கே. கோவிந்தராஜ் , இலங்கையின் மலையக எழுத்தாளர் (பி.1949) (இ.2009)



ஆயு உத்தமி , இந்தோனேசிய எழுத்தாளர் (பி.1969)



## இன்றைய நினைவு நாள்

ச. வெ. இராமன் , நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியலாளர் (பி.1888) (இ.1970)



தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் , இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி (பி.1903) (இ.1991)



## உலகத் தொலைக்காட்சி நாள்